முருகப்பெருமான் துணை

**மகான் ஏயர்கோன் கலிகாம நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.07.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தயவான ஞான குருவே
   தரணிக்கு தன் தவபலத்தை
   தயவென தியாகம் செய்தநல்
   தணிகைவேலன் அவதார வடிவே
2. அவதார அரங்கனே உன் பெருமை
   அறிவித்து அருளாசிதன்னை
   அவனியில் சுபகிருது மிதுன திங்கள்
   அறிவிப்பேன் மூவாறோர்திகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 19 நாள், 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் ஏயர்கோன் கலிகாம நாயனாரும்
   வையகம் வளமுற உரைப்பேன்
   பாரெங்கும் அரங்கன் தரும
   பலம்தானும் நிரம்பி வருக
4. வருகவே கலியின் இடர்கள்
   வலுவிழந்து விலகி ஒடும்
   தருகின்ற உயர் குணங்கள்
   தயவான செயல் முறைகளுமாக
5. ஆகவே நிலைகள் மாறி
   அகிலத்தில் நல் ஆற்றல் கூடும்
   மிகைபட தரும சிந்தையும்
   மேலான முருகப் பெருமான் வழிபாடும்
6. வழிபாடும் பெருகும் தன்மை
   வையகம் மக்கள் வழி அடைய
   அழிவிலா இயற்கை பாதுகாப்பும்
   ஆபத்துப் பேரிடர் ஏதுமின்றி
7. ஏதுமின்றி உலகம் மீளும்
   எங்கும் அரங்கஞானி காட்டும்
   வேதமான சன்மார்க்கநெறி
   விதையாகி முளைத்து வளர
8. வளர வளர மாற்றமாக
   வையகம் உயர்ந்து நன்கு
   வளமும் சகல வகைதனிலும்
   வளர்ச்சி மிகுந்து காண்கும்
9. காண்கவே இந்தவித சமூகம்
   கந்தவேலன் அருட்தயவால்
   உண்மை நிறைந்த நல்
   உயர்வான ஞான பூமியாக

10. ஆகவே மாற்றம் கண்டு
ஆளுமையும் ஞானவழி
மிகையான மாந்தர் கூடிய
மேலான சபையாக நிரம்பி

11. நிரம்பி ஞான ஆட்சியை
நிலவுலகம் சடுதி காணும்
அரங்கன் வழி வர அற்புதம்நிகழும்
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–